**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

அசல் வழக்கு எண். 134/2022

வா.சா.1 –விஸ்வநான்

02–07–2024 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1ம் மற்றும் 2ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. நாச்சிமுத்து என்கின்ற நாச்சியப்பகவுண்டரான எனது தாயாரின் தகப்பானாரின் வாரிசு சான்றிதழ் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். அவர் 22.01.1967 ல் இறந்து விட்டார் அவரது மனைவி பெயர் வள்ளியாத்தாள், 1970ல் இறந்துவிட்டார். வள்ளியாத்தாளின் இறப்பு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நாச்சிமுத்து என்கின்ற நாச்சியப்பகவுண்டருக்கு பாப்பம்மாள் மற்றும் சுப்பாத்தாள் என்ற 2மகள்கள் மற்றும் பொன்னுசாமி, சின்னசாமி, அருணாச்சலகவுண்டர்,பழனிசாமி, கிட்டுச்சாமி, மற்றும் ராமசாமி, என்ற 6 மகன்கள் வாரிசுகள்.

2.பொன்னுசாமி இறந்துவிட்டார் அவரது இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. சின்னசாமி இறந்துவிட்டார் அவரது இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. அருணாசலகவுண்டர் இறந்துவிட்டார் அவரது இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. பழனிசாமி இறந்துவிட்டார் அவரது இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. பழனிசாமியின் மனைவின் பெயர் முத்தம்மாள் 16ம் பிரதிவாதியாக உள்ளார். மேற்படி முத்தம்மாள் நாச்சிமுத்துகவுண்டருக்கு வாரிசாக வரமாட்டார்கள் என்றால் சரியல்ல. கிட்டுசாமி இறந்துவிட்டார் அவரது இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. கிட்டுசாமியின் மனைவி 19 ம் பிரதிவாதி அங்காத்தாள் அவரும் நாச்சிமுத்துக்கவுண்டருக்கு வாரிசாக வரமாட்டார்கள் என்றால் சரியல்ல. ராமசாமி இறந்துவிட்டார் அவரது இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. அரசு தரப்பில் தாக்கல் செய்த பதிலை படித்துப்பார்த்தேன்.

3.பொன்னுசாமி மகன் லோகநாதன் இறந்துவிட்டார் அவரது இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. சின்னசாமியின் மகள் சகுந்தலா இறந்துவிட்டார் அவரது இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. கருணாமூர்த்தி அருணாச்சலகவுண்டர் மகன் சுப்பிரமணியின் வாரிசு அவரது இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. ராமசாமியின் மகள் ஈஸ்வரியின் இறப்பு வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை. 4ம் வாதி சரஸ்வதி என்பவர் பாப்பம்மாளின் மருமகள் ஆவார் சரஸ்வதி நாச்சிமுத்துக்கவுண்டருக்கு வாரிசாக வரமாட்டார்கள் என்றால் சரியல்ல. எனது சகோதரி ராமாத்தாள் இவ்வழக்கில் தரப்பிராக இல்லை என்றால் சரிதான். வாதிகள் மற்றும் 3 முதல் 27 பிரதிவாதிகள் நாச்சிமுத்து கவுண்டருக்கு வாரிசு என்று காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் நாச்சிமுத்துக்கவுண்டரின் பேரன் பேத்திகள். நாச்சிமுத்துகவுண்டரின் தகப்பாரின் பெயர் பாட்டையக்கவுண்டர் தாயார் பெயர் தெரியாது. 4, 12, 16, மற்றும் 19 பிரதிவாதிகள் இவ்வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர் என்றால் சரியல்ல.

4.1967 ல் இறந்த நாச்சிமுத்துகவுண்டருக்கு தற்போதைய வாரிசு சான்றிதழ் கேட்கிறேன் என்றால் பாகவழக்கு நிலுவையில் உள்ளது.அது 2ம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வா..148/2022 ஆக நிலுவையில் உள்ளது. அவ்வழக்கிலேயே இந்த பரிகாரத்தை தேடிக்ககொள்ளலாம் என்றும் தனியாக இவ்வழக்கு தேவையில்லை என்றால் சரியல்ல. அப்புக்குட்டிக்கு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சுப்பாதத்தாளின் கணவர் சென்னிமலைக்கும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சுப்பாத்தாளின் மகன் பழனிசாமி திருமணம் ஆகாமல் இறந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. முறையாக ஆவணம் இன்றி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு தள்ளுபடி

ஆகவேண்டும் என்றால் சரியல்ல. உரிய தரப்பினரை சேர்க்காததாலும் அவசியமற்ற தரப்பினரை சேர்த்துள்ளாலும் இவ்வழக்கை தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல. 1967 ல் இறந்தவருக்கு தற்போது வாரிசு சான்றிதழ் கேட்பது காலவரையரை சட்டத்தால் பாதிக்கப்பட்டள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒப்பம், திருமதி, A. சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.